# முரசுமோட்டை சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர் பலர் ராணுவத்தால் கைது; கடையும் தீக்கிரை

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 30 11-85 சனிக்கிழமை (கார்த்திகை 15 ரபியு அவ் 17) முழக்கம் 295

(கிளிநொச்சி)

முரசுமோட்டைப் பகுதி இரண்டாவது தடவையாக மீண்டும் நேற்று முன்தினம் ராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். இளைஞர்களின் கடையொன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவங்களின்போது படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்துப் பெரும் தொகையான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறிக் காடுகளுக்குள் சென்றனர். நேற்று முன்தினம் காலை பஸ்ஸிலும் மினிபஸ்ஸிலும் சென்ற ஆனையிறவு முகாமைச் சேர்ந்தவர்களே இவ்வேட்டையை நடத்தினர். மனநோயாளி இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டாராயினும், கிளிநொச்சி பிரஜைகள் குழு, கிளிநொச்சி நவஜீவனம் ஆகியவை எடுத்த முயற்சியை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

# தமிழ் குழுக்கள் 2ம் திகதி தங்கள் யோசனையை சமர்ப்பிப்பர்; பேச்சுக்களில் திடீர் திருப்பம்!

இனப்பிரச்சினைப் பேச்சு வார்த்தை தொடர்பாக இருபகுதியினருக்குமிடையில் நிலவிவந்த இழுபறியில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டுள்ளதாக சென்னையிலிருந்து நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகவலின் படி நான்கு பிரதான அமைப்புக்களைக் கொண்ட ஈழம் தேசிய விடுதலை முன்னணி இனப்பிரச்சினை தொடர்பாக தமது திட்டத்தை நாளை மறுதினம் இரண்டாம் திகதி எழுத்து மூலம் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் தமது நகல் திட்டத்தை இந்திய அரசிடம் சமர்ப்பிக்க சம்மதித்துள்ளதாம். தமிழக மின்துறை அமைச்சர் திரு. எஸ் இராமச்சந்திரன் கடந்த இரு தினங்களாக எடுத்த முயற்சியின் பயனாகவே தமிழீழக் குழுக்கள் இதற்கு இணங்கியதாக தெரியவந்துள்ளது.

# மூதூர், சேனையூர், சம்பூரில் 145 வீடுகள் எரிக்கப்பட்டன!

## சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலம் வீதியில் டயர் போட்டு எரிக்கப்பட்டது!

(திருமலை)

மூதூர், சேனையூர், சம்பூர், கட்டைபறிச்சான் ஆகிய தமிழ்க் கிராமங்களுக்குள் பிரவேசித்த ஆயுதப்படையினர் சுமார் நூற்றுநாற்பத்தைந்துக்கும் அதிகமான தமிழரின் வீடுகளையும், அவர்களின் பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகளையும் தீக்கிரையாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சுமார் பதினெட்டுப் பேரின் சடலங்கள் சம்பூரில் வீதியருகில் டயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளன.

இதனைத்தவிர கந்தையா சுந்தரம் (30), வைரமுத்து துரைராசசிங்கம் (22) ஆகிய இருவரும் பிளாஸ்டிக் படகொன்றில் ஏற்றிச் செல்லப்பட்டு சுடப்பட்டதாகவும், இதில் சுந்தரம் மட்டுமே தப்பியதாகவும் தெரியவந்

...6 ஆம் பக்கம் பார்க்க

## கைதான இருபதுபேர் பற்றி தகவல் பெறமுடியவில்லை!

மூதூர் கட்டைபறிச்சான், சம்பூர், கடற்கரைச் சேனைப் பகுதிகளில் கடந்த மூன்று தினங்களில் கைதான இருபது பேரைப்பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்றும் அஞ்சப்படுகின்றது. இவ்வாறு காணாமல் போனவர்களின்

—6 ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடுவீடு முற்றுகையில் நால்வர் கொலையுண்டனர்

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் தீவிரவாதிகள் முகாமொன்று நேற்று ஆயுதப் படையினரால் முற்றுகையிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் போது நான்கு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகவும் தெரியவந்துள்ளது.

படையினரால் சேதமாக்கப்பட்ட வீட்டுக்குள்ளிருந்த டெலிவிஷன், டெக் உட்பட வேறு பல பொருட்களையும் சோதனையிட வந்தவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

## மட்டுநகரில் நால்வர் கைது

(மட்டுநகர்)

மட்டுநகரில் நேற்று நான்கு இளைஞர்கள் ஆயுதப் படை

...6 ஆம் பக்கம் பார்க்க

## அனுராதபுரம்வரை மட்டுமே ரயில்சேவை நடைபெறலாம்

(கொழும்பு)

வடபகுதிக்கான ரயில்கள் மீது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தாக்குதல்கள் காரணமாக வடபகுதிக்கான ரயில் சேவையை அனுராதபுரத்துடன் நிறுத்துவது பற்றி அரசாங்கம் இப்பொழுது ஆராய்ந்து வருவதாக ரயில்வே பகுதி பொது முகாமையாளர் திரு. வீரசூரிய பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

இவ் வருடத்தில் இதுவரையில் வடக்கு, கிழக்குப் பகுதி ரயில் சேவைகள் மீது அறுபத்

... 6 ஆம் பக்கம் பார்க்க

### நேற்று நடைபெற்றது:

## பாதுகாப்பு அமைச்சில் ஆயுதங்களின் கண்காட்சி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடந்த நான்கு மாதங்களில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களின் போது கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பெருமளவு ஆயுதங்கள்பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நேற்று

...6 ஆம் பக்கம் பார்க்க

### பிரஜைகள் குழுவுக்கு அதிகாரிகள் உறுதி:

## கோட்டையிலுள்ள கிளிநொச்சி இளைஞர் மீதான விசாரணை துரிதப்படுத்தப்படும்!

கிளிநொச்சியில் ஏற்கனவே கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் இருபத்தைந்து இளைஞர்கள் மீதான விசாரணை இப்போது ஆரம்பமாகியுள்ளது. ஓரிரு வாரங்களில் விசாரணைகள் முடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சனை சம்பந்தமாக கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் நேற்று யாழ். கோட்டைக்குச் சென்று உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பிரஜைகள் குழுவின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் கே. சுப்பையா, செயலா

...6 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

# வரி விளம்பரம்

### கல்வி

I, C. M. A. செக்ஷன் A May 1986 பரீட்சைக்கு பே தறை வகுப்புகள். சனி, ஞாயிறு, போயா தினங்களில். ஆர பம்: 1-12-85 காலை வன்னியசிங்கம் M Sc. (Econ) (Lond); B. Com. (Lond) வை வர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப் பாணம். தொலைபேசி: 24424

### திட்டப்பரிசு பெறுபவர்

அங்கத்துவ நண்பர்களினுல் தெரிவுசெய்ய பெற்று இம் மாதம் ரூபாய் ஓராயிரம் பரிசு பெறுவர் M. ருசாமி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை, தினசரி வருவாய்கள், அதிஷ்டம், நுதுசோபனம், திருமணம், பிரவசம் விபத்துக்கள், அந்தியகாலம் முதலியவற்றுக்குரிய ஏராளமான நன்கொடைகளும் கடன் வசதிகளும் ஒருங்கே அமைந்தது இத்திட்டம் விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய்

### வாடகைக்கு

வீடியோ / றேடியோ வாச் ரிப்பயர் போன்ற வியாபாரத்திற்கு கந்த இடம் உடன் வாடகைக்குண்டு தொடர்பு-மல்ரி சேவ்சஸ், 37(351) மணிக் கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.

### ஒப்படைக்கப்பட்டது

இம்மாதம் இருபத்தெட்டாந் திகதி அனுலாவதி என்பவரால் பஸ் ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட பேர்ஸ், பணம், மோதிரம் உட்பட நாவற்குழியைச்சேர்ந்த தம்பிஐயா மனோன் மணியினுடையது எனக் கோரப்பட்டதால் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதை அறியத் தருகிறேன். வே. த. சந்திரதாஸ், தென் மட்டுவில், சாவகச்சேரி.

### தேவை

பிள்ளைகளைப் பராமரிப்பதற்குப் பணிப்பெண் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும். K. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கு, சுண்டுக்குழி,

## சட்டத்தரணி



(சரசாலை)

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கில் வசிப்பவருமாகிய அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பிரதம நீதியரசர் சு. சர்வானந்தா முன்னிலையில் உயர் நீதி மன்றச் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். கொழும்பு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் பதவி நிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றுமிவர், முன்னர் நீதிமன்ற தலங்களில் முதலியாராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பட்டதாரியென்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுகாதார நிலையம்

(சரசாலை)

சரசாலை கிராமசபை மண்டபத்தில் அமைந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை வைத்திய அதிகாரி எஸ். நடராசா ஆரம்பித்து வைத்தார். பண்டிதர் க சிவகுருநாதன் திருமதி எம். மகேஸ்வரி ஆசிரியை உட்பட பலர் கருத்துரை வழங்கினர்.

## வெடியரசன் புகழ் பாட...

(சுண்டுக்குளி)

சரித்திரப்புகழ் வாய்ந்த வெடியரசனுக்குத் தொல்புரத்தில் சிலை அமைக்கப்படவுள்ளது. தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது வெடியரசன் வரலாற்றை நூலாக வெளியிடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதி தொல்புரம் ஆதிமுத்துமாரியம்மன் இந்து இளைஞர்மன்ற மடாலயத்தில் நடைபெறுமென்றும். வெடியரசன் சிலை, வரலாறு பற்றிய ஆலோசனைகளை வரவேற்பதாகவும் அமைப்புக் குழுச் செயலாளர்கள் திரு, சி. சி. வரதராசா, திரு. நா. முருகையா ஆகியோர் அறிவித்துள்ளனர்.

## பெருமாள் கோவில் நாளை சாந்தீக சங்காபிஷேகம்

உலக ஷேமத்திற்கும் பக்தர்கள் துயர் நீக்கத்திற்கும் பிரார்த்தனையாய் வண்ணை வரதராஜப் பெருமாளுக்கு மகா சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளான விநாயகர், ரெங்கநாதர், மகாலஷ்மி, ஆண்டாள், நவக்கிரக மூர்த்திகள், ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்கட்கு மகா ஸ்நபனாபிஷேகமும் நாளை நடைபெறவுள்ளது.

பூர்வாங்க கிரியைகள் இன்று மாலை 4 30க்கு ஆரம்பமாகும். நாளை காலை மஹா யாக பூசை ஹோமம் 8 மணிக்கும், மகாசங்காபிஷேக ஆராதனை 10.30 மணியளவிலும் ஆரம்பமாகும். பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் பிரதம குருவாக முன்னின்று இச்சங்காபிஷேகத்தை நடத்துவார்கள்.

பக்தர்கள் உபகரிக்க விரும்பும் அபிஷேக திரவியம் முதலியனவற்றை தேவஸ்தான காரியாலயம் நாளை காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரையும் பெற்றுக் கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ் – கொழும்புத்துறை மணிப்புரி குடியேற்றத்திட்ட இளைஞர் ஒன்றியம் அண்மையில் புனரமைக்கப்பட்டது. இந்த குடியேற்றத்திட்டத்தில் நிலவிவந்த அபிவிருத்தி குறைபாடுகளை இளைஞர்களின் ஒத்துழைப்புடனும், இப்பகுதி குடியேற்ற மக்களின் ஆதரவுடனும் நிவர்த்தி செய்வதும், சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதே இந்த ஒன்றியத்தின் நோக்கமாகும்.

இதனுல் சகலரும் ஒத்துழைப்பு வழங்கி ஒன்றியத்துக்கு ஆதரவுதரும்படி இதன் செயற்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## புனரமைப்பினுல் புத்தூக்கம்

(உடுவில்)

சங்குவேலிக் கிராமத்திலுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கு முகமாக அக்கிராமத்தில் அண்மையில் விவசாய அபிவிருத்திச் சங்கம் அங்குரார்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் பயனுக அரசாங்கத்தால் பத்தாயிரம் ரூபா மதிப்பிடப்பட்டுப் பின்னர் அத்திட்டம் கைவிடப்பட்ட நிலையிலிருந்த, கரந்தன் வாய்க்காலை சிரமதான அடிப்படையில் அவ்வூர் இளைஞர்களால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்:–தலைவர்- திரு. சிவ. ஸ்ரீநீஸ்கந்தநாதன், உப-தலைவர்கள்: திரு. பொ. சத்திவேல், திரு. கு.சண்முகலிங்கம், செயலாளர்: திரு. ம. தவபாஸ்கரன், உப-செயலாளர். திரு. ஐ. செல்வராசா, பொருளாளர் திரு. க. சந்திரவர்ணன், நிர்வாகசபை உறுப்பினர்களாக: திருவாளர்கள் மு நித்தியானந்தன், க. யோகீஸ்வரன், க. தவராசா, மு. சிவலோகநாதன், ம. கமலசேகரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மூளாய் வைத்தியசாலை பொறுப்பேற்பு

(காரைநகர்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை தனியார் மருத்துவக் கல்லூரிக்குப் பயன் படுத்தும் நோக்குடன் வட இலங்கை வைத்திய கலாநிதிகள் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் அதிகார சபை மண்டபத்தில் கடந்தவாரம் நடைபெற்ற வைபவத்தில் பணிப்பாளர் சபைத் தலைவர் திரு. சு. சிவகுரு, வட இலங்கை வைத்திய கலாநிதிகள் சங்கத் தலைவர் டாக்டர் கெங்காதரனிடம் வைத்தியசாலைத் திறப்புகளைக் கையளித்தார்.

பணியாளர் சபைச் செயலாளர் திரு சோ.க. வேலாயுதர் மூளாய் வைத்தியசாலையை வட இலங்கை வைத்திய கலாநிதிகள் சங்கத்திற்கு வைத்திய சேவை, வைத்திய ஆராய்ச்சி, வைத்தியக் கல்வி ஆகியவற்றிற்கு இருபத்திரண்டு வருடகுத்தகை ஒப்பந்த அடிப்படையில் கொடுப்பதற்கான அனுமதிப் பத்திரங்களை வாசித்து வழங்கினுர்.

கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு. எம். கந்தையா, திரு. க அமிர்தசிங்கம், திரு. எஸ் இராதாகிருஷ்ணன் உட்பட மற்றும் பலர் இவ்வைபவத்தில் உரை நிகழ்த்தினர்.

## வீடமைப்புக்கடன்

(சரசாலை)

யாழ். மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினர் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு வீடமைப்புக்கடனை இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளனர்.

## பிறந்த நாள் வாழ்த்து

✱ நாவாலி தெட்சணுமூர்த்தி ஜெகதாம்பிகை தம்பதியின் மகன் நிஷாந்தன் இன்றுதனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✱ யாழ். அன்னசத்திர ஒழுங்கை சிவராஜசிங்கம் செல்வராணி தம்பதியின் மகள் தர்ஜீகா இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✱ நீர்வேலி தெற்கு, சுப்பிரமணியம் சரோஜினிதேவி தம்பதியின் மகன் உதயசங்கர் இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளை கொண்டாடுகிறுர்.

✱ நல்லூர் ஆடியபாதம் வீதி, தனபாலசிங்கம் கமலாதேவி தம்பதியின் மகள் தீபா இன்று தனது ஆருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்:

✱ காரைநகர் இலகடி முத்துலிங்கம் பிரேமாவதி தம்பதியின் மகள் துஷ்யந்தினி இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✱ மாவிட்டபுரம்யோகராஜா ஜெயபத்மினி தம்பதியின் மகள் ஜெயப்பிரியா இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✱ நல்லூர் நாயன்மார்வீதி பரஞ்சோதி தம்பதியின் மகள் பிறேமா இன்று தனது பிறந்த நாளை கொண்டாடுகிறுர்.

✱ கிளிநொச்சி திருநகர் ஜேக்கப் போல்மாகிறட்தம்பதியின் மகள் கிலேரா இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✱ கோப்பாய் தெற்கு, துரைராஜா உருத்திராதேவி தம்பதியின் மகள் சிவதர்ஸினி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி D. டிலூசினி

30-11-1985



மலரவிருக்கும் தங்கத் தமிழ் ஈழத்திலே தளர்நடை
பயிலுவேன் நான் என புன்னகைக்கிறதோ
இப் பூஞ்சிட்டு

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த டிலூக்ஸ் சாரளா தம்பதிகளின் செல்வப் புதல்வி டிலூசினி இன்று 1வது பிறந்ததினத்தை அவரது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறுர். டிலூசினியை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அப்பப்பா, பூட்டன், பூட்டி, பெரியம்மா பெரியப்பா, சித்திமார், சித்தப்பாமார், அண்ணன்மார், அண்ணிமார், அக்காமார், சவுதி மாமா, வெளிநாட்டில் இருக்கின்ற பெரியோர்கள், கப்பலில் போய்க் கொண்டிருக்கும் அப்பா, ஜேர்மனியில் இருந்து வந்து கொண்டிருக்கும் அப்பா. மற்றும் பெரியோர்கள் டிலூசினியை அரோகிய மாதா அருள்பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறுர்கள்.

நயினை இரத்தினசிங்கம்,
கந்தன் கருணை,
மண்ஊர்.

## அஸ்தி நல்லடக்க ஆராதனை

### திரு. தேவதாசன் இராஜநாயகம் J.P.

(Retd. Chief M. L. T.
General Hospital, Colombo)

அவர்கள் 24-11-85 அன்று கொழும்பில் காலமானுர். அன்னுர் திருமதி இராஜநாயகம் (மணி)யின் அன்புக் கணவரும், தேவகி (U K)யின் அன்பு தந்தையும், திருமதி முத்துராசா, தங்கமணி ஆகியோரின் சகோதரரும், திருமதி A C. துரைராசா, A. C. செல்வராசா, A. C. ஜெயராசா, A. C. முத்துராசா, திருமதி. கிறேஸ் சற்குணசிங்கம், A. C. கனகராசா, திருமதி. ரூசி தம்பிஐயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னுரின் அஸ்தி நல்லடக்க ஆராதனை 30-11-85 இன்று மாலை 3 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அவர்களின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

ச. தேவசேயன்.

''உபாத்தியார் வளவு'',
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

# சமிக்ஞை கம்பித்திருட்டுகள்: பாதிக்கப்படுவது மக்களே

## தொலைத் தொடர்பு அதிகாரி விசனம்

(கொடிகாமம்)

"புகையிரத சமிக்ஞை தொடர்புக்கம்பிகள் காங்கேசன்துறைக்கும்-மாங்குளத்திற்குமிடைப்பட்ட பகுதியில் சில இடங்களில் மீண்டும், மீண்டும் வெட்டப்படுகின்றன. இதனால் புகையிரதக்கட்டுப்பாட்டு நிலையம், புகையிரத நிலையங்கள் என்பவற்றிற்கிடையேயான தொடர்புகள் துண்டிக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்களே பல வகையிலும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும். இவற்றை மீண்டும் திருத்துவதற்கு வேண்டிய உபகரணங்களை நாம் எடுத்த பெரு முயற்சியின் பயனாகவே அனுராதபுரத்திலிருந்து பெறமுடிந்தது. தொடர்ந்தும் இம்மாதிரியான துண்டிப்பு வேலைகள் இடம் பெற்றால் திருத்த வேலைகளை தொடரமுடியாத நிலை ஏற்படலாம். எனவே தொலைதொடர்ட கம்பித்திருட்டை தடுக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்."

மேற்கண்டவாறு யாழ். மாவட்டப்புகையிரததொலைத் தொடர்பு பிரதம பரிசோதகர் திரு: எஸ். ஜெயதாசன் 'ஈழமுரசு' மூலம் விடுத்த வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில் "காங்கேசன்துறைக்கும்-கொடிகாமத்திற்குமிடையேயான தொடர்பு கம்பி திருத்த வேலைகள் தற்பொழுது முடிவுற்றுள்ளன. தொடர்ந்தும் மாங்குளம் வரை இவற்றை பொருந்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்பட்டு வருகின்றன" என்றார்.

மகாவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை அறிவுரை

# தொழில் பயிற்சிகள் மூலம் சுயதொழில் வாய்ப்பு பெற மாணவர் முயல வேண்டும்

(காரைநகர்)

"மாணவர்கள் தொழிற் பயிற்சிகளை மேற்கொண்டு சுய தொழில்வாய்ப்பினைத் தேடிக்கொள்ள முற்படவேண்டும். கனடா அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்பயிற்சி நிலையம் வடபகுதி மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்."

இவ்வாறு யாழ் - சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவிய தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். மறை மாவட்ட ஆயர். மகாவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை குறிப்பிட்டார்.

யாழ்-பத்திரிசியார் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் கலாநிதி. ஜே. பி. சி. பிலிப்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ்.மறைமாவட்ட ஆயர். மகாவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில், "இளைய தலைமுறையினர் தாமே தமக்கு வேண்டிய தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்கள் இத் தொழிற்பயிற்சி நிலையத்தை நடாத்தி வருகிறார்கள். இங்கு மின்னிணைப்பு- வயரிங் தச்சுத்தொழில் போன்ற துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

உள்நாட்டில் என்றாலும் வெளிநாடுகளில் என்றாலும் வேலை வாய்ப்பினைத் தேடிக் கொள்வதற்கு இப்பயிற்சி நெறிகள் பெரிதும் உதவும்" என்றார்.

பயிற்சிநெறிகளைப் பூர்த்தி செய்து பரீட்சையில் சித்தி பெற்றமாணவர்களுக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் மகாவந் தியோகுப்பிள்ளை சான்றிதழ்களை வழங்கினார்.

## வருடாந்த 'கரோல்'

(நல்லூர்)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியும் இணைந்து நடாத்திய வருடாந்த "கரோல்" ஆராதனை சுண்டுக்குளி பரி. யோவான் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பெருந் தொகையானோர் கலந்து கொண்ட இவ்வாராதனையில் ஜெபங்களை சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயச் சேகரக்குழு அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளார் ஏறெடுத்தார். தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட் சாதீனப் பேராயர் பேரருட் திரு. டி. யே. அம்பலவாணர் ஆண்டகை தேவாசீர்வாதம் வழங்கினர்.

கல்விப் பணிப்பாளர் சுற்றுநிருபம்

# ஆசிரியர் சேவைப் புத்தகம் நிரப்பப்படல் மிக அவசியம்

(கொடிகாமம்)

ஆசிரியர் சேவைப்புத்தகத்தை தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்களும், தராதரப்பத்திரமில்லாத ஆசிரியர்களும் கட்டாயம் நிரப்பி பாடசாலை அதிபர்களிடம் கையளிக்க வேண்டுமென யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ச. சிமியாம்பிள்ளை பணித்துள்ளார்.

அவர் இது பற்றிப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் "84 ம் ஆண்டு ஆசிரியர்சேவை புத்தகம் சம்பந்தமாக வெளிவந்த சுற்று நிருபத்தில் உள்ளது போல் ஒவ்வொரு ஆசிரியரும் 70ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஆசிரிய சேவை சம்பந்தமாக தொடர்ச்சியாக தமக்கு ஏற்பட்டுள்ள சகல விபரங்களையும் இப்புத்தகத்தில் தவறாது பதியவேண்டுமெனக்கூறியுள்ளார்.

இதன்படி குறித்த திகதியிலிருந்து ஒவ்வொரு ஆசிரியரும் சம்பள உயர்ச்சி, இடைநிறுத்தம், சம்பளமாற்றம், வினைத்திறன்காண் தடைமேலுயர்ச்சி, சேவை இடைநிறுத்தம், சேவை நீடிப்பு, தண்டனை போன்ற விபரங்களை தமது சேவைப்புத்தகத்தில் பதிய வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது

கிறிஸ்தவச் சபைகளும்

# 'கர்னாடக இசையில் காட்டும் ஆர்வம் வரவேற்கத்தக்கது'

(நல்லூர்)

"யாழ். வேம்படி மகளிர் உயர்தர கல்லூரியில் சங்கீத ஆசிரியையாகப் பணிபுரிந்து தற்பொழுது நைஜீரியாவில் பணி புரியும் திருமதி பரமேஸ்வரி விஜயரத்தினத்தினால் இசையமைப்புடன் ஆக்கப்பட்டு யாழ்ப்பாண கிறிஸ்த ஐக்கிய சங்கத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ள இந்த "கிறிஸ்தவ சங்கீர்த்தன மாலை" என்னும் கர்னாடக இசை அமைப்புடன் கூடிய129 பாடல்கள் கொண்ட பாடல் நூல் கிறிஸ்த சபைகளின் வழிபாட்டிற்கு மிகவும் உதவியாக அமையும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற "கிறிஸ்தவ சங்கீர்த்தனமாலை" நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்த யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத் தலைவர் திரு. யே. ஜி. அரசரத்தினம் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அருட்திரு. எச். ஆர் எஸ். ஜெயச்சந்திரன் அடிகளாரின் ஜெபத்துடன் ஆரம்பமாகிய வெளியீட்டு விழாவில் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை முதலாவது பிரதியை வேம்படி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி தம்பையா விடம் வழங்கி வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்.

திரு. பரம் தில்லைராசா ஆய்வுரை நிகழ்த்துகையில், "கர்னாடக இசையில் கிறிஸ்தவ பாடல்கள் அன்று பாடப்படவில்லை. அப்பொழுது இருந்த சூழ்நிலை கர்னாடக இசைக்கு கிறிஸ்தவ சபைகள் மதிப்பளிக்கவில்லை. இன்று நிலைமை முற்றும் மாறி விட்டது தமிழ் மக்கள் தமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் போற்றி வளர்க்கத் தலைப்பட்டிருக்கும் இவ்வேளையில் கிறிஸ்த சபைகளும் தமது ஆராதனையில் கர்னாடக இசையமைப்புக் கொண்ட பாடல்களைப் பாடி இறைவனைத் தோத்தரிக்க முற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்" என்றார்.

சங்கீர்த்தன மாலையிலுள்ள பல பாடல்களை செல்விகளான கீதா பரம் தில்லைராசா, வத்சலா - அரியரத்தினம் ஆகியோர் பாடினர். பக்கவாத்தியங்களாக மிருதங்கம் திரு ரி. இராசன். வயலின் திரு எம். சிறீரங்கநாதன், கிற்றார் திரு. எம். கண்ணன் ஆகியோர் வாசித்தனர்.

சங்கச் செயலாளர் அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளாளர் நன்றியுரை நிகழ்த்தினார்.

## 'சந்தோஷ கீதங்கள்'

(நல்லூர்)

புத்தூர் பரிசுத்த லூக்கா மெதடிஸ்த திருச்சபையின் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் "சந்தோஷ கீதங்கள்" என்னும் கிறிஸ்தவ நிகழ்ச்சி யாழ். ரிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது'

வடக்கு- கிழக்கு மெதடிஸ்த திருச்சபைகளின் தலைவர் அருள்திரு. எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அடிகளார் தலைமையில் அடிகளாரின் ஜெபத்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் 8 சபைகளைச் சேர்ந்த வாலிபர் சங்கக் குழுக்களும் கலந்து கொண்டு தனித்தனி பாடல்களைப் பாடினர்.

## 16 நிலையங்களில் பரீட்சை ஏற்பாடு

(கொடிகாமம்)

டிசம்பர் மாதம் 7ம் திகதி ஆரம்பமாகும் கல்விப்பொதுத் தாராதரப்பத்திர சாதாரண தரப்பரீட்சை சாவகச்சேரி கல்வி வட்டாரத்தில் மொத்தம் பதினறு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதினறு நிலையங்களும் அமைந்துள்ள ஏழு பாடசாலைகளுக்கும் பரீட்சை இணைப்பு அதிகாரி காரியாலயமாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி என்பன செயற்படும்.

க. பொ. த. (சாதாரண) பரீட்சை

# கண்காணிப்புக் குழுவை கடமையில் ஈடுபடுத்த முடிவு

(காரைநகர்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் 7 ம் திகதி தொடக்கம் 16 ம் திகதி வரை நடைபெறவுள்ள க. பொ. த. ப. (சாதாரண) தரப் பரீட்சை வெளியாரின் தலையீடின்றி சுலபமாக நடைபெறும் பொருட்டு வடபகுதிப் பாடசாலைகளில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையின் அறிவுறுத்தலின் பேரிலேயே கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சமாதானக் குழு

(வண்ணார்பண்ணை)

வண்ணார்பண்ணை பிரப்பன் குளம் பொது நல சேவை சங்கம் ஆதரவில் சமாதானக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. மக்கள் தங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகள் சச்சரவுகள் போன்றவற்றை மனிதாபிமான அடிப்படையில் சுமூகமாகத் தீர்த்து வைப்பதையே இக்குழு முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படவுள்ளது.

இக்குழு கிழக்கே காங்கேசன் துறை வீதியையும், தெற்கே நாவலர் வீதியையும், மேற்கே மானிப்பாய் வீதியையும், வடக்கே ஐயனார் கோவில் வீதியையும் உள்ளடக்கிய இடங்களில் உள்ள பிரச்சினைகளையே மையமாகக் கொண்டு செயற்படவுள்ளது.

## 'அபிவிருத்தியின் முதுகெலும்பு பனைவளமே'

(சுண்டுக்குளி)

"எமது இயற்கை வளமான பனை மரத்தை நாம் விருத்தி செய்வதன் மூலம் எமது பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த முடியும். வடபகுதியின் பொருளாதார அபிவிருத்திக்குப் பனைவளமே முதுகெலும்பாக உள்ளது. பனம் விதைகளை நாட்டி எமது பனை வளத்தைப் பாதுகாப்பதில் கற்பகதரு நாயகர் திரு. க. கனகராசா எடுத்து வரும் தன்னலமற்ற சேவை மகத்தான சாதனையாகும்."

இவ்வாறு கொழும்புத்துறை கிழக்கு சட்டம்பித்தறை விசாகப் பெருமாள் ஆலயத்தில் சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா இலவசமாக வழங்கிய ஏட்டுச் சுவடிகளையும், மாணவ, மாணவிகளுக்கான வாய்ப்பாடுகள், அறிவு நூல்களையும்விநியோகித்துப் பேசுகையில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைச் செயற்குழு உறுப்பினரும், தொல்புரம் மத்தி இந்து இளைஞர் மன்ற உபதலைவருமான திரு. சி. சி. வரதராசா கூறினார்.

## புனரமைப்பு

யாழ். கொழும்புத்துறை மணிப்புரி குடியேற்றத்திட்டத்தில் இளைஞர் ஒன்றியம் புனரமைக்கப்பட்டு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்; செல்வன் பிரசாத், உப தலைவர்; செல்வன் சிறி செயலாளர்: செல்வன் றெஜினேல்ட், உப செயலாளர்; திரு. வ. தர்மதாஸ், பொருளாளர்; செல்வன் சிவா, உப பொருளாளர்: செல்வன் ஜோய்.

பதினைந்து பேர் கொண்ட ஆலோசனைக் குழுவும் தெரிவானது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## நூல் நிலையத் திறப்புவிழா!

காலம்: 1-12-1985 ஞாயிறு காலை 10மணி.
இடம்: பட்டப்படிப்புகள் கல்லூரி.
திறந்து வைப்பவர்:
'சிவதர்மவள்ளல்'
திரு. க. கனகராஜா, J. P.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காப்பாளர், தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள்,
தமிழ் மாணவர் மன்றம்.

## அறிவித்தல்

ஈராக் பிரயாணத்திற்காக என்னிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் அல்லது புதிதாக ஜெட்டா செல்ல விரும்புபவர்கள் இருந்தால் நேரில் என்னை சந்திக்கவும் மேல் விபரம் நேரில்.

A. மகேந்திரன்
155, குருசோவீதி, யாழ்ப்பாணம்.

உதய சிந்தனை

*வலது கை கொடுப்பது, இடது கையுக்குத் தெரியக் கூடாது.*
*—பழமொழி.*

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

30-11-85 சனிக்கிழமை (குரோதன கார்த்திகை-15)

# மனமிருந்தால் இடமிருக்கும்!

ஈழத்தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு, அனாதைகளாக்கப்பட்டுவரும் அவலநிலையினை நேற்று இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாறு அல்லலுறும் தமிழ்க் குடும்பங்களுக்கு 'அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்' ஆற்றிவரும் அரும்பணிகள் பற்றி இங்கு குறிப்பிடப்படவேண்டியது எமது முக்கியமான கடமையெனக் கருதுகின்றோம்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்குப் பிரசாரம் தேடுவதற்கென்ற நோக்கமின்றி, அவர்கள் ஆற்றிவரும் அரும்பெரும் சேவையில் மனம் படைத்த நல்லோர் பலரைச் சேர்த்து விடுவதற்காகவே இதனை நாம் எழுதவேண்டி நேர்ந்துள்ளது.

நித்தம் நித்தம் தமிழர் சுட்டுக்கொலை; வெட்டிக்கொலை; அடித்துக்கொலை; தீ மூட்டிக்கொலை; வீடுகள் எரிக்கப்பட்டன; உடைமைகள் சூறையாடப்பட்டன என்றெல்லாம் நாம் செய்திகளை வெளியிட்டு வருகின்றோம்.

1983 ம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருமலையில் வெடித்த இனக்கலவரம் – இப்படிக்கூறுவதிலும் பார்க்கத் தமிழர் படுகொலைப் படலம் என்று கூறுவதே பொருத்தமானது– 83 ஜூலையில் வெறியாட்டம் ஆடி, இன்றும் தொடர்ந்து கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருக்கிறது.

தினசரி எங்காவது ஒரு மூலையில், யாராவது ஒரு தமிழன் கொலைசெய்யப்படாத நாள் இல்லையென்று கூறுமளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

கொலைச் செய்திகளை வெறும் செய்தியாகவே படித்துவிட்டு, அதனால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி, அவர்கள் குடும்பத்தின் எதிர்காலம் பற்றி எதனையுமே சிந்திக்காதவர்களாகவே எமது சமூகத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் இன்றும் இருந்து வருகின்றார்கள்.

இனக்கலவரங்களால் படுகொலை செய்யப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் பற்றிய சரியான கணக்கெடுப்பே கைவசமில்லாத நிலையில் தமிழ்ச் சமூகம் இன்றிருக்கின்றது

இந்த நிலையில் வெளிநாட்டு, குறிப்பாக ஐரோப்பிய நாட்டு மனித நலநாட்டமுள்ள நிறுவனங்களின் உதவியுடன் 'அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்' ஆற்றிவரும் மகத்தான பணி, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது.

கழகம் இதுவரை சேகரித்த புள்ளி விபரங்கள் மூலம், 1983 ஜூன் முதல் இற்றைவரையான இரண்டரை வருடங்களில் சுமார் நாலாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென கணக்கிடப்பட்டுள்ளது.

மிகக் குறைந்த மதிப்பீடாகவே இதனைக் கருதவேண்டுமென கழகத் தலைவர் திரு. கா. விஸ்வலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களில் சுமார் இரண்டாயிரம் பேர்பற்றிய சரியான விபரங்களைக் கழகம் பெற்றுள்ளது. இவர்களே தமது குடும்பத்தைப் பராமரிப்பவர்களாக இருந்து வந்துள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களின் சீவனோபாயத்துக்கு புனர்வாழ்வளிக்கும் வகையில் கழகம்தொழில் முயற்சிகளை அமைத்துக்கொடுத்து, நிதிவசதியையும் பெற்றுக்கொடுத்துள்ளமை, இன்றைய நிலையில் பாராட்டப்படவேண்டியதாகும்.

சிங்கள அகதிகளுக்குப் போதும் போதுமென உதவிவரும் அரசாங்கம், தமிழ் அகதிகளுக்கு இலவச பங்கீட்டு உணவையே நிறுத்தப்போவதாக எச்சரித்துவரும் இவ்வேளையில், அரசாங்கத்தின் எந்த உதவியுமில்லாமல் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவரும் பாரிய பணிகளைப் பாராட்டுவதுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது.

வெளிநாட்டு உதவிகளை மட்டும் நம்பியிருக்கும் கழகத்துக்கு, உள்ளூரிலிருந்தும் உதவிகள் கிடைக்கக் கூடாதா?

இரப்போர் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்க நம்மவர் ஒவ்வொருவரும் தம்மாலான ஏதாவது உதவியைச் செய்யக் கூடாதா?

அகதிகள் துயர் துடைக்க நம்மவர் ஒவ்வொருவரும் பங்காளிகளாக மாறக் கூடாதா?

பொன்னும் பொருளும் தான் கொடுக்க வேண்டுமென்றில்லை.

எங்களால் முடிந்ததை மனம் வைத்து வழங்கி, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அரியபணி வளர்ந்தோங்க கரங்கொடுப்போம் என இன்றே உறுதி பூணுவோம்!

மனமிருந்தால் இடமில்லாமலா போய்விடும்!

---

● சிறப்புக் கட்டுரை

# இந்துக்களின் நோய் தீர்க்கும் புனிதகங்கை நஞ்சாகிறது

கங்கை நதியில் புனித தீர்த்தம் ஆடுவதற்காக நாளாந்தம் எழுபதினாயிரம் யாத்திரீகர்கள் இந்தியாவின் நாலா பகுதிகலிருந்தும் இந்துக்களின் புனித நகரமான பெனாரிசுக்கு வருகை தருகிறார்கள். அவர்கள் திரும்பும்போது தமது புண்ணியானச் செம்புகளில் பரிசுத்த கங்கை நீரையும், நீருடன் சேர்ந்த நோய்காவும் கிருமிகளையும், என்றுமே வீட்டைவிட்டு வெளியேறியறியாத தமது உற்றாரை நோய் வாய்ப்படையச் செய்வதற்காக எடுத்துச் செல்கிறார்கள்.

நாடளாவிய ரீதியில், கல்வியறிவுள்ள நகரத்தாரிடமும், படியாத கிராமத்தவர்களிடையேயும் நிலவும் பரவலான பாரம்பரிய நம்பிக்கை,கங்கைப் புனித நீர் கெடுதி தராதென்பதே! பாரிய நீர் நிலைகளில் சாதாரணமாக நிகழும் சுயசுத்திகரிக்கும் இயல்பினால், கங்கை நதி தன்னை மாசுபடுத்த இடங்கொடாது. சரியான நல்ல இயல்புகளுடன் இருப்பதை அறிவியலாளர்கள் அறிந்துள்ளனர். இந்த இயல்பு, நதி மாசாக்கப்படும் இடத்திலிருந்து 22 கிலோ மீற்றருக் கிடைப்பட்ட பகுதிக்குட்தான் சாத்தியப்படும்.

நாளாந்தம், 120 மில்லியன் லீற்றர் நகரத்துக் கழிவு நீரும், உலகப் பிரசித்திபெற்ற பட்டுக் கைத்தொழிற்சாலை இரசாயனக் கழிவு நீரும், பல நூற்றுக் கணக்கான மனித, மிருகச் சடலங்களும்பெனாரிசின் தீர்த்தக் கரைக்கிட்டிய தொலைவில் கங்கை நதியில் தள்ளிவிடப்படுகின்றன. நகரத்து வீட்டுக் குழாய்களில் கிடைக்கும் குடிதண்ணீர், குளோரினேற்றிய பீலிலிருந்து வழிந்தோடும் நீரைவிடச்சிறந்ததேயல்ல.

தற்பேது வாரணாசி என அழைக்கப்படும் பெனாரிசில் தொற்றுநோய் ஒன்று ஏற்படுமானால் அது ஒரு வாரத்துக்குள்ளேயே நாடு முழுவதும் பரவிவிடும் என்கிறார் நகரத்து ஆணையாளர். இந்தியாவில் ஏனைய பிராந்தியங்களிலிருந்து பரந்துபட்ட அளவில் யாத்திரிகர்கள் வந்து குவிந்ததால், 1927 ல் வாரணாசியில் தோற்றிய கொலரா வியாதி இந்தியா முழுவதையுமே ஆட்டம் காண வைத்தது.

இமயமலையிலிருந்து வங்காள விரிகுடா வரையிலான 2500 கிலோ மீற்றர் தூரம் நீண்டு, பெருத்த கங்கை, வாரணாசியில் பாரிய அளவில் மாசு படுத்தப்பட்ட போதும், வாரணாசிதான் மிகவும் மாசுபடுத்தப்பட்ட இடமெனக் கொள்ள முடியாது. திட்டமெதுவுமற்ற, முறையற்ற நகர்ப்புற வளர்ச்சியினால் வளர்த்தெடுக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு இன்று முகங்கொடுத்துத் தீர்வளிப்பது மிகவும் சிரமமானதென நிருவாகம் தற்போது உணர்கின்றது.

1894-ல் நகரத்து மேற்பகுதியிலிருந்து நீர் பெறுவதற்கு அமைக்கப்பட்ட நீர்ப் பாய்ச்சும் இயந்திரம்தான் இன்றும் நீர்வழங்கலில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால், இன்றோ குடிநீர் பெறப்படும் பகுதியை அடுத்த மேற்பகுதியிலுள்ள புதிய தொழிற்சாலைகளிலிருந்தும், மக்கள் குடியேற்றங்களிலிருந்தும் வெளியேறும் கழிவுப் பதார்த்தங்களும், திரவங்களும் கங்கை நீரை ஆபத்தான நிலைக்குத் தரங்குறைத்துள்ளன. இங்கே ஒரு கால்வாயூடாக, அரசாங்க உடமையாக்கப்பட்ட டீசல் புகையிரத வேலைத் தளத்திலிருந்து நான்கு மில்லியன் லீற்றர் எண்ணெய்க் கழிவுப் பதார்த்தங்களும், அங்கு வேலை செய்வோர்களது வீடுகளிலிருந்து வெளியேறும் எட்டு மில்லியன் லீற்றர் சாக்கடைக் கழிவு நீரும் கொண்டுவரப்பட்டு கங்கையின் நீர் வழங்கு பகுதியில் சேர்க்கப்படுகிறது.

வாரணாசி நகரத்து சாக்கடைக் கழிவு நீரெல்லாம் சுத்திகரிக்கப்படாமலேயே கங்கை நீரிற் கலக்கின்றன. 5 வருடங்களுக்கு முன்புவரை இந்த நீரெல்லாம் நகருக்கு அப்பாலுள்ள பண்ணைகளுக்கு இயந்திரங்களின் உதவியால் இறைக்கப்பட்டன. இந்த இயந்திரங்கள் பழுதடைந்த போது, கழிவுப் பொருளெல்லாம் கங்கையில் விடப்பட்டன. வாரணாசியின் கீழ்ப் பகுதியிலும் வேறு இரு பாரிய சாக்கடை சுத்திகரிப்பு இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் திருத்தி செயற்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களும், வந்தேறு குடி வேலையாட்களும் ஆற்றங் கரையினிலேயே காலைக் கடன்களைக் கழிக்கின்றனர். ஆற்றங்கரை

கே. கோபாலகிருஷ்ணன்

ஓரத்தில் அமைந்துள்ள 40 கால் நடைப்பண்ணை இடையர்கள், தமது எருமைகளையும், பசுக்களையும் கங்கை நதியினிலேயே குளிப்பாட்டுகிறார்கள். ஆனால், இந்த நதி மாசுபடுத்தப்படுவதனால் ஆரோக்கியத்துக்கு விளையும் ஆபத்தைப் பற்றி முறையாக ஆராயப்படவேயில்லை.

நகருக்குக் கிட்டிய கிராமங்களில் சிசு இறப்பு விகிதம், தேசிய சராசரி இறப்பு விகிதத்திலும் பார்க்க 44 வீதம் கூடுதலானதென்றும், வயிற்று வலி, குடற்புழுக்கள், செங்கமாரி போன்றனவே குழந்தைகளைப் பாதிப்பதாகவும், பெனாரில் இந்துப் பல்கலைக் கழகத்தின் சுற்றுப்புறச் சூழல் குழந்தை மருத்துவப் பகுதியைச் சேர்ந்த டாக்டர் அகர்வால் அவர்கள் அவதானித்துள்ளார். குழந்தைகள் வாழும் சுற்றாடற் சூழலை மேம்படுத்துவதனால் மாத்திரமே வயிற்றோட்ட நோய்களாற் பிள்ளைகள் இறப்பதையும், தொற்றுநோய் ஏற்படுதலையும் கட்டுப்படுத்தலாம் என அழுத்திக் கூறுகிறார் பல்கலைக் கழக குழந்தை வைத்தியப் பேராசிரியர்.

இப்பிரதேசத்து கிராமவாசிகள் கூட முன்னரிலும் பார்க்கத் தாம் இன்று அதிகளவிலான நோய்களினால் தாக்கமுற்றுத் துன்புறுவதாக உணர்கின்றனர். கங்கை நதி நீரையே நீர்ப்பாசனத்திற்கும், வீட்டுத் தேவைகளுக்கும் உபயோகிக்கும் அநேக கிராமத்து மக்கள் அடிக்கடி வயிற்றுவலி, மஞ்சள் காமாலை, இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்களினால் தாக்கப்பட்டு வருந்துகிறார்கள் எனக் கூறுகிறார் ஒரு ஐம்பது வயதுப் கிராமத்துப் பெரியவர்.

நோய்கள் பரவுவதற்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளபோதும், கங்கை நீரின் புனிதத்தன்மையிலும், நோய்களைக் குணப்படுத்தும் சக்தியிலும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை வலுநிரம்பியதாகவே இன்றும் விளங்குகின்றது. இந்த வலுவான நம்பிக்கைக்கான மூலாதாரத்தை தேடிய, பட்னா பல்கலைக் கழகத்துப் பூகற்பவியற்றிணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி சோஸ் அவர்கள், கங்கை நீரில் மிகக் குறைந்தளவில் நிறமற்ற கதிரியக்க உலோகமான ராடன் செறிந்திருப்பதைக் கண்டறிந்துள்ளார். புனித கங்கையில் தோற்றுவாமை அண்மித்த இமாலயத்தின் மேற்பகுதியிலுள்ள கதிர் வீச்சுக் கற்பாறைகளூடாக ஆற்றுநீர் பாய்ந்தோடும்போது இந்த ராடன் உலோகம் கங்கையில் சங்கமம் ஆகியிருக்கலாம்.

ஆரோக்கியத்திற்கு உதவும் சுற்றுலாப் பகுதிகள் பலவற்றிலுள்ள வெப்ப நீரூற்றுக்களிலிருந்து கிடைக்கும் நீர், நோய் குறைக்க வல்லதே; ராடல் உலோகம் இந்த சுடுநீர் நிலைகளிலும் செறிந்துள்ளது; இவை ஆற்றை மாசுபடுத்தவல்லனவைகளை சரிப்படுத்த உதவலாமென கருதுகிறார் கலாநிதி கோஸ்.

சாக்கடைகளிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் வரும் கழிவுப் பதார்த்தங்கள் ஒரு வரையறுக்கப்பட்ட அளவிற்குக் குறைந்த அளவில் கங்கையில் கலக்கும்வரை இயற்கைத் தன்மையினாலேயே பாரம்பரிய கௌரவத்துடன், புனித கங்கையாய்த் தொடர்ந்தும் பெருமையுடன் திகழலாம். ஆனால், கங்கையின் தன்னைத்தானே தூய்மைப்படுத்தும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதெனக் கலாநிதி கோஸ் கூறுகின்றார். அசுத்த மாக்கலைப் பாரிய அளவில் தாங்கிக் கொள்ளவல்ல நதியின் எல்லைகள் மீறப்படும்போது, விளைவுகள் பாரதூரமாகி நரகத்திற்கே இட்டுச் செல்லும்.

கங்கையில், கட்டுக்கடங்காதளவில் கழிவுப் பதார்த்தங்கள் குவிக்கப்படுதல் கூடிய விரைவில் கட்டுப்படுத்தப்படாவிட்டால், யாத்திரீகர்கள் கொடூர நோய்களைத் தரவல்ல மிகவும் அசுத்தமான நீரையே புனித செம்புகளில் தமது வீடுகளுக்குக் கொண்டு செல்வார்கள். நம்பிக்கை நிறைந்த மக்களின் உயிர் நாடியான கங்கை நீர் இன்று நோய் தருவதாய் விட்டது. இன்றுவரை கண்டு, கேட்டறியாத அளவு கொடிய தொற்றுநோய்க்கான காரணி கங்கை நீராய் விடுமோ?

(ஏத்ஸிகான்.)

★ பகிரங்க அரசியல் நடவடிக்கை அனுமதிகோரி

# பங்களாதேஷ் எதிரணிகள் மீண்டும் கிளர்ச்சி

## அரசுக்கு புதிய நெருக்கடி!

(டாக்கா)

பங்களாதேஷில் பகிரங்க அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தமக்கு அனுமதி வழங்கப்படவேண்டுமென பங்களாதேஷின் எதிர்க்கட்சிகள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளன. பொதுத்தேர்தல் நடத்தப்படும் திகதி உடனடியாக அறிவிக்கப்படவேண்டும், தொழிற்சங்க நடவடிக்கைகள் அனுமதிக்கப்படவேண்டும் என்றும் அவை வலியுறுத்தியுள்ளன. இதனல் அரசுக்குப் புதிய நெருக்கடி உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதினைந்து கட்சிகள் கொண்ட கூட்டணியும், ஏழு கட்சிகள் கொண்ட கூட்டணியும் இக்கோரிக்கைகளை விடுத்துள்ளன,

அடுத்தமாதம் 7ம் 8ம் திகதிகளில் டாக்காவில் நடைபெறவுள்ள தெற்காசியப் பிராந்திய நாடுகளின் மாநாட்டுக்கு முன்னதாக இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் இக்கூட்டணிகளின் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, தடையுத்தரவையும் மீறி இக்கூட்டணிகள் வீதிகளில் பேரணி ஒன்றை வியாழக்கிழமை நடத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹிந்தி திணிப்பு வாபஸ் தமிழக எதிர்ப்பு வெற்றி!

(புதுடில்லி)

ஹிந்திமொழித்திணிப்புக்குஎதிராக அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் கிளப்பிய கடும் ஆட்சேபம் பலனளித்துள்ளது. மத்தியஅரசின் உதவி பெறும் சகல தன்னுட்சி அமைப்புகளும் பொதுநிறுவனங்களும் தமது அன்ருடக்கடமைகளில் ஹிந்தி மொழியைப்பயன்படுத்தவேண்டுமென்ற பணிப்பை மத்திய அரசு வாபஸ் பெற்றுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.



மத்திய அரசின் இப்பணிப்பை லோகசபையிலும், ராஜ்ய சபையிலும் மேற்படி இருகட்சிகளினதும் எம். பிக்கள் மிக வன்மையாக எதிர்த்துக் குரலெழுப்பியிருந்தனர்.

கடந்த மாதம் நான்காம் திகதி பிறப்பிக்கப்பட்ட இப்பணிப்பு நேருஜி அளித்த வாக்குறிதியை மீறுவதாக உள்ளது என்று அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனை எதிர்த்து சென்னையில் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சார்பில் அ. இ அ. தி மு. க. பொதுச் செயலாளர் திரு. எஸ். ராகவானந்தமும், தி. மு. க. சார்பில் அதன் தலைவர் கலைஞர் மு. கருணநிதியும் தனித்தனி கண்டன அறிக்கைகள் வெளியிட்டிருந்தனர்.



லோகசபையிலிருந்து தி.மு.க. எம். பி. திரு.சோமு இதனை எதிர்த்து வெளிநடப்புக்கூடச் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாரத ராஜதந்திரிகள் தாக்குதல்

## பாக். அரசிஞல் 6 சீக்கியர் கைதாகினர் என அறிவிப்பு

(கராச்சி)

பாகிஸ்தானில் வைத்து பாரத இராஜதந்திரிகள் இருவர் தாககப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆறு சீக்கியர்கள் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கனடாவில் வசிக்கும் எட்டுச் சீக்கியர்கள் இந்த அதிகாரிகளைத் தாக்கிக் காயம் விளைவித்திருந்தனர்.

இது தொடர்பான புலன் விசாரணைகளைப் பாகிஸ்தான் அதிகாரிகள் தொடங்கியுள்ளதாக அரசின் பத்திரிகைக் குறிப்பை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் சொல்கிருர்; ஜப்பானுடன்

## பரிவுணர்வு ஒத்துழைப்பு வலுவுறுவதே நம் விருப்பம்

(டோக்கியோ)

"ஜப்பானுடன் பாரதம் பரிவுணர்வையும், நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் மேன்மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புகிறது என்று பிரதம மநதிரி திரு. ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

நான்கு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அவர் நேற்றுமுன்தினம் டோக்கியோ வந்தடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் அவர் ஜப்பானியப் பிரதம மந்திரி திரு. நாகஷோனேயை சந்தித்துப்பேசினர். ஜப்பானியப்பிரதமமந்திரி திரு. காந்தியைக் கௌரவித்து அரச விருந்துபசாரம் ஒன்றையும் நேற்று மாலை அளித்தார்.

அஸாமில் இ. காங். உறுதிமொழி

## ஒப்பந்தம் சீருளஅமுலாகும் தூய்மை ஆட்சி அமையும்

(கொஹாட்டி)

"அஸாம் தேர்தலில் இந்திர காங்கிரஸ் வெற்றியீட்டும் பட்சத்தில் பிரதமரால் உருவாக்கப்பட்ட அஸாம் ஒப்பந்தம் முழுமையாகச் செயற்படுத்தப்படும் "என்று அஸாம் தேர்தலையொட்டி இந்திரா காங்கிரஸ் விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

"சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாக்கப்படும், தூய்மையானதும், திறமையானதுமான ஆட்சி அமைக்கப்படும். சமூகப் பொருளாதாரத் துறைகளில் கரிசனை காட்டப்படும், உழைப்போர் நலன் பராமரிக்கப்படும்'' என்றும் இதில் மேலும் உறுயளிக்கப்பட்டுள்ளது.


## Radio and Electronics Engineering Course

**Week end classes 6 months**

Radio, Tape Recorders, Hi Fi Stereo Ampilifier, Radio Control, Transfomer Winding

பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும் இவற்றேடு இன்னேரன்ன பல இலத்திரனியன் கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான

THEORY & PRACTICALSம்
DIGITAL ELECTRONICS &
THEORY OF TELEVISION

- ✱ வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
- ✱ சுய தொழில் விரும்புவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.
- ✱ எமது பழைய மாணவர்கள் பலர் கூட்டுத்தாபனங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிருர்கள்.

**கட்டணம் ரூ. 1000/-**

(தவணை முறையிலும் செலுத்தலாம்)

ஆசிரியர்: பிரபல விரிவுரையாளர்
E. கணபதிப்பிள்ளை

ஆரம்பம் 7-12-85
காலை 10.00 மணி

**CANTABIA INSTITUTE**
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201


## மதுரைக்கு புதிய விமான சேவை

(சென்னை)

சென்னையிலிருந்து மதுரைக்கு விசேட விமான சேவை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த 'போயிங்' விமானம் இரவு 7. 05 மணிக்கு சென்னையில் இருந்து புறப்பட்டு இரவு 7-45 மணிக்கு பெங்களூரில் தரித்து 8-15 மணிக்கு மீண்டும் புறப்பட்டு இரவு 9. 05 மணிக்கு மதுரையைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ரூபா 65 லட்சம் நாசம்

(கன்யாகுமரி)

கன்யாகுமரி மாவட்டத்தில் சமீபத்திய வெள்ளத்தால் அறுபத்தைந்து இலட்சம் ரூபா வரை நாசம் விளைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உடன்படிக்கை

சோவியத் யூனியனுடன் பாரதம் பத்துக் கோடி ரூபாவுக்கும் கூடுதல் தொகையான வர்த்தக உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டுள்ளது.


பழைய கச்சேரி, யாழ்ப்பாணம்

## கட்டடங்கள் திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்

1985ம் ஆண்டு மார்கழிமாதம் 6ம் திகதி காலை 10.00 மணிவரை யாழ். நிர்வாக உத்தியோகத்தர் அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளை ரூபா 25,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் ஒப்பந்தகாரரோ அவர்களின் பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ் வேலைகளைச் செய்ய விரும்புவோர் எவரும் அரசகரும வேலை ஒப்பந்தகாரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினுல் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினுல் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்வேலைகளைச்செய்வதற்குவிரும்புவோர் 1985 12 04 திகதி பி.ப. 3 00 மணிவரை யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தவரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. பழைய கச்சேரி கட்டட, திருத்த வேலையும், வெள்ளையடித்தலும்.
2. மலசலகூட திருத்தவேலை.
3. நீர் இறைக்கும் மின் இயத்திரம் 1. 5. பரிவலு கொண்ட, 2'' விட்டமுடைய குளாய் இணைப்புடன் பொருத்துதல்.

மேற்படி திருத்த வேலைகள் யாவும் 31. 12. 85க்குள் பூர்த்திசெய்ய வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் என்வலப்பின் இடதுபக்க மூலையில் "கச்சேரி கட்டடங்களுக்கான திருத்த வேலை'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
21. 11. 1985.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

ஈழமுரசு

## இலங்கை, இந்திய, பாகிஸ்தான் தலைவர்களுக்கு கடும் பாதுகாப்பு

டாக்காவில் அடுத்த மாதம் ஏழாம் எட்டாம் திகதிகளில் நடைபெற வுள்ள 'தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு மகாநாட்டில் கலந்து கொள்ள வுள்ள ஆறு நாடுகளின் தலைவர்களில், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆகியோருக்கே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இம்மூன்று நாடுகளினதும் பாதுகாப்பு நிபுணர்கள் கடந்த வாரம் டாக்கா சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணித்து திருப்தி தெரிவித்துள்ளார்கள். டாக்கா நகரில் இப்பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக 25,000க்கு மேற்பட்ட படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மாநாட்டில் தேவராஜன் அடிகள் கேள்வி:

# யாழ்ப்பாணத்தில் ஏதாவது பிரச்சினை உருவானல்

# அகதிகள் எங்கே செல்வது?

(ம. ரூபன்)

**அகதிகளாக வடக்கே வருவோரின் நிலை மிகவும் பரிதாபமானது. இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு போய் தமது வேலைகளைச் செய்வதோடு சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழவேண்டும். இவ்வாறு வண. பிதா. ரீ. தேவராஜன் அடிகள் அகதிகள் மாநாட்டின் நேற்றைய நிகழ்ச்சியில் பேசும் போது கூறினர்:**

திரு. இ. முருகையா தலைமையில் யாழ் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் வண. தேவராஜன் தொடர்ந்து பேசுகையில் வவுனியா, திருமலை மற்றும் தென் பகுதிகளில் நடைபெறும் வன்முறைகளால் பல தமிழ் அகதிகள் இடம் பெயர்ந்து வடக்கே வந்துள்ளனர். சிலர் இன்றும் வந்து கொண்டு இருக்கிறார்கள் எல்லோரும் யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்தால், நாளை இங்கும் பிரச்சினைகள் எழுந்தால் நமது நிலை என்னவாகும். நாம் எங்கு போவது? இதனை நாம் சிந்திக்க வேண்டும் எனவே ஒரு சுமுகமான தீர்வு வந்து சகலரும் தமது இடங்களுக்கு போக வேண்டும் என்ருர்.

கண்ணகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் பேசுகையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஆயுதப் படையினரின் நடவடிக்கை இல்லாவிட்டால் இந்த அகதிகள் பிரச்சினைகள் வரமாட்டாது, அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை சம்பந்தப்பட்டவர்கள் செய்ய முன்வரவேண்டும் என்ருர்.

அகதிகள் புனர்வாழ்வு கழகத் தலைவர் திரு. கே. விஸ்வலிங்கம் பேசுகையில் "அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்கள் எவ்வளவு கஸ்டப்பட்டாலும் டிசம்பர் 31ஆம் திகதி வரையும் வட பகுதியிலேயே இருக்க வேண்டும். அகதிகளாக வந்தவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு போனலே தமது முயற்சிகளைக்கொண்டு சீவிக்கலாம் என்றும், அகதிகள்புனர்வாழ்வு கழகம் வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற்று அவற்றை அகதிகள் வாழ்க்கைக்கு உதவ நடவடிக்கை எடுக்கிறது என்ருர். தற்போதைய நிலையில் அகதிகளுக்கு இங்கு தொழிற்சாலைகளையோ வேறு முயற்சிகளைச் செய்யமுடியாது இருக்கிறது என்று சொன்ன அவர் இந்த கழகம் செய்த சேவைகளை விபரித்தார்.

திரு. நியூட்டன் பேசுகையில் அகதிகளில் தொண்ணூறு வீதமானேர் இந்தியாவுக்கு போகவே விரும்புகிருர்கள். ஆனல் அவர்களிடம் வசதியில்லை. செல்வந்தர்கள் இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் போய் தஞ்சம் புகுந்துள்ளனர் என்ருர். வேறு பலரும் உரையாற்றினர்கள். மாநாடு தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

### அகதிகள் விளையாட்டு போட்டி

நல்லூர் சங்கிலியன் புனர் வாழ்வுக் கழகம் நடாத்தும் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தோரின் புனர் வாழ்வுக்காகவும், கல்வியங்காடு செங்குந்த இந்துக் கல்லூரியின் அபிவிருத்திக்காகவும் கலை, கலாச்சார விளையாட்டு நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சிகளில் ஆண், பெண் மற்றும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டோருக்கான சைக்கிள் ஓட்டம், ஐந்து மைல் மரதன் ஓட்டம் ஆகியனவும் இடம்பெறுகின்றன.

மாலையில் கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் இடம் பெறும்.

## 2000 குடும்பத் தலைவர்கள் இரண்டரை ஆண்டில் கொலை

1983 ஜூன் மாதத்திலிருந்து கடந்த இரண்டரை வருடங்களில் இனக்கலவரங்கள் காரணமாக இரண்டாயிரம் குடும்பத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் சேகரித்த புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

குறிப்பிட்ட இந்தக் காலத்தில் ஆகக்குறைந்தது நாலாயிரம் தமிழர்கள் கொல்லப் பட்டிருக்கலாமெனவும் கழகம் சேகரித்த விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள் சுயதொழில்களில் ஈடுபட பல்லாயிரக் கணக்கான ரூபாவைக் கழகம் செலவிட்டதும் குறிப்பிடத்தக்கது.

### பவுஸர் கடத்தல்

(மட்டுநகர்)

செங்கலடியில் பெற்ருேலுடன் சென்ற பவுஸர் ஒன்று நேற்று இனம் தெரியாத கோஷ்டியொன்றினல் கடத்திச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### கைதான ...

பெயர் விபரங்கள் வருமாறு:-

பத்தினியன் துரைரத்தினம் (29), நச்சிக்கன் சிறி (20), விநாயகமூர்த்தி துரைநாயகம் (38), வைரமணி சின்னராசா (22), செல்லத்துரை நவரத்தினராசா (25), செல்வராசா கணேசலிங்கம் (22), கந்தையா சிங்காரவேலு (22), செல்வராசா முருகன் (18), சண்முகம் அருள் (19), கோபாலகிருஷ்ணன் நாகரத்தினம் (22), கார்த்திகேசு கதிர்காமத்தம்பி (40), சின்னத்தம்பி விநாயகமூர்த்தி (23), கதிர்காமத்தம்பி கனகசிங்கம் (35), கரதிமலை தங்கராஜா (60), மருசலீன் (60) கனகரத்தினம் சிவம் (27) சின்னத்துரை. சி (65), கோபாலலிங்கம் பிரேமராசா (22), சுப்பிரமணியம் சின்னையா (26) காங்கேசு அழகசுந்தரம் (32).

### கோட்டையிலுள்ள ....

ளர் சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்கந்தராசா, பொருளாளர் ரி. எஸ். தர்மசிங்கம், உபதலைவர் கே. வி கே. திருலோகமூர்த்தி, உபசெயலாளர் அ. தாமோதரம் பிள்ளை, உபபொருளாளர் எஸ். சாந்தலிங்கம் ஆகியோரே கோட்டைக்குச் சென்று உயர் அதிகாரிகளான கேணல்கெமுனு குலதுங்கா, லெப்டினன்ட் உடுகபல ஆகியோரைச் சந்தித்து கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் விசாரணையைத் துரிதப்படுத்தி அப்பாவி இளைஞர்களை விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டனர்.

பிரஜைகள் குழுவினரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அவ் உயர் அதிகாரிகள் ஏற்கனவே கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டு விட்டதாகவும், விசாரணையின் பின் அப்பாவி இளைஞர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்தனர்.

### பாதுகாப்பு ...

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இராணுவ வாகனங்கள் மூலம் நேற்றுக்காலை கொண்டு வரப்பட்ட இவ் ஆயுதங்களும் மற்றும் தஸ்தாவேஜுகளும் செய்தி நிருபர்களுக்கும் நேற்றுக் காண்பிக்கப்பட்டன.

சென்னையிலுள்ள இராணுவ பொலிஸ் உடைகளை விற்பனை செய்யும் நிலையமொன்றின் புகைப்படம், எல். ரீ. ரீ. ஈ என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்ட கைக்குண்டுகள், குட்டிமணி, தங்கத்துரை போன்ருேரின் படங்களுடன் கூடிய சுவரொட்டிகள் ஆகியனவும் இங்கு காணப்பட்டன.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கலாநிதி விக்கிரம வீரசூரிய இது சம்பந்தமாக செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

### அனுராதபுரம்....

தொரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனல் அரசாங்கத்திற்கு பத்து கோடி ரூபாவுக்குமேல் நட்டம் மேற்பட்டுள்ளதெனவும் அவர் எடுத்துக் கூறினர்.

### மட்டுநகரில் ....

யினரால் கைது செய்யப்பட்டனர். முகமூடியணிந்து கொண்டுவரப்பட்ட ஒருவர் இவர்களை அடையாளம் காட்டிக்கொடுத்தாராம்.

### மூதூர் ...

துள்ளது.

சம்பூரில் மட்டும் நூறு வீடுகள் எரிக்கப்பட்டுள்ளதாகவும், மூதூர், கட்டை பறிச்சானில் இருபத்தைந்து வீடுகளும், கடற்கரைச் சேனையில் இருபது வீடுகளும் எரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களாக முப்படையினரும் இப்பகுதியில் சோதனை நடத்தியதாகவும், தொடர்ச்சியாக குண்டு வெடிப்பு, துப்பாக்கி வேட்டுச் சத்தங்களே கேட்டவண்ணமிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


# I. C. M. A

## [MAY '86]

## Commencing on 2nd Dec. '85

| | | | |
|---|---|---|---|
| I. C. M. A - Section 'A' | | (week-days) | 2-12-85 |
| | Section 'B' | (week-ends) | 7-12-85 |
| Professional | Part I | (week-ends) | 7-12-85 |
| I. A. B. Foundation / Inter / Final | | | 7-12-85 |

தகுதியும் திறமையும் நீண்டகால அனுபவமும் கொண்ட போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர் குழு.

திருவாளர்கள்

V கருணநிதி, K. P அரவிந்தன், ஜோய் டேவிட் S. சிவபாலன், S. R. உதயணன், Mrs. S. மூர்த்தி

Mr. V. Karunanithy will be lecturing only in our Institute.

விபரங்களுக்கு

**RAPID RESULTS INSTITUTE**

212, Kachcheri - Nallur Road, Jaffna

"GOOD WINE NEEDS NO BUSH"



டிசெம்பர் 7 (சனிக்கிழமை)

புனித மரியன்னையின்

மாசற்ற உற்பவம்

பெருவிழாவும் கடன் திருநாளும்

29-11-85 யாழ். ஆயர் இல்லம்.

வ. தியோகுப்பிள்ளை, யாழ். ஆயர்.


### மரண அறிவித்தல்

#### வயிரவப்பிள்ளை தெய்வநாதன்

மல்லாகம் வயிரவப்பிள்ளை தெய்வநாதன் இறைவனடி சேர்ந்தார் அன்னர் புவனேஸ்வரியின் அன்புக் கணவராவார். பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாலை 3 மணிக்கு தெல்லிப்பளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ. பாலேந்திரா.

"இராஜ வில்லா"
கே கே எஸ் வீதி, மல்லாகம்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேட்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 30-11-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336